செ. கு. எண் 35 நாள் 14-08-09

# மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும் சுதந்திரத் திருநாள் வாழ்த்துச் செய்தி (14.8.2009)

ஆகஸ்டு திங்கள் 15 ஆம் நாள் ! நமது நாட்டின் சுதந்திரத் திருநாள் !

இந்த வீர சுதந்திரத் திருநாளைக்கான அந்நிய ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்துப் போராடி துப்பாக்கிக் குண்டுகளாலும், தூக்குமரங்களாலும் கொல்லப்பட்டும், சிறைக் கொட்டடிகளில் செக்கிழுத்தும், சித்திரவதைகளுக்கு ஆட்படுத்தப்பட்டும், சொல்லொணாத் தொல்லைகளுக்கு ஆளாகித் தியாகங்கள் பல புரிந்த தீரர்களை நினைந்து வணங்கி இந்நாளில் நமது வீர வணக்கத்தைச் செலுத்திடுவோம் !

நமது இந்தியத் திருநாடு சுதந்திரம் பெற்றபின் உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு என்னும் பெருமையுடன் கல்வி, அறிவியல், தொழில்நுட்பம் அனைத்திலும் இன்று உலக நாடுகளுக்கு இணையாக முன்னேறி வருகிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரை ஏழை எளியோர் ஏற்றம்பெற ஒரு ரூபாய்க்கு 1 கிலோ அரிசித் திட்டம்; இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் முதலான பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

தொழில் வளர்ச்சியுடன், பொருளாதார வளர்ச்சி கண்டு வேலைவாய்ப்புகள் பெருக 32 புதிய தொழில்களைத் தொடங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 9 தொழிற்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

ஏழைச் சிறார்களுக்கான இருதய அறுவை சிகிச்சைத் திட்டம்; பள்ளிச் சிறார்களுக்கான இருதய அறுவை சிகிச்சைத் திட்டம்; அரசு ஊழியர்களுக்கான புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம்; ஆகிய திட்டங்களுடன் ஒரு கோடி குடும்பங்கள் பயனடையும் உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம் என்னும் புரட்சிகரமான திட்டமும் செயல்படுத்தப்பட்டு தமிழகம் இந்தியாவின் முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது.

அண்டை மாநிலங்களுடன் தொடர்ந்து நல்லுறவு பேணப்படவேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு என்றும் செயல்பட்டுவரும் இந்த அரசு ஒரு முத்திரைச் சாதனையாக கர்நாடக மாநில அரசுடன் இணைந்து பெங்களூரில் அய்யன் திருவள்ளுவர் சிலையைத் திறந்தும், சென்னையில் கன்னட மொழிக் கவிஞர் சர்வக்ஞர் அவர்களின் திருவுருவச் சிலையைச் திறந்து வைத்தும் தேசிய அளவில் மாநிலங்களுக்கிடையே நல்லுறவு பேணப்படுவதற்கு வழிகாட்டப் பட்டுள்ளது. இந்த இனியவேளையில் கொண்டாடப்படும் சுதந்திரத் திருநாளில் சாதி, மத, மொழி வேறுபாடுகளுக்கு இடம்கொடாமல் ஒன்றுபட்டு நின்று சுதந்திரத்தின் பயன் முழுவதையும் நமது நாட்டு மக்களுக்கு தொடர்ந்து கிடைத்திட அனைவரும் உறுதியேற்று உழைப்போம் எனக்கூறி இத்திருநாளில் தமிழக மக்களுக்கு என் சுதந்திர நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9